DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SANKARANKOVIL.

Calender --- CC No. 27/2019
Miscellaneous ---
Preliminary Register

Sessions --- PW 4
Deposition of witness for
Name : செந்தில்குமார்
Father's Name :

Village :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

24.06.2025

**( Both Accused absent Petition U/s 317 Cr.P.C filed and allowed.)**

முதல் விசாரணை:

நான் சங்கரன்கோவிலில் வசித்து வருகிறேன். நான் டீ மாஸ்டராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரிக்க அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

கடந்த 10.06.2017 ம்தேதி காலை 9.00 மணியளவில் நானும் கனகராஜ் என்பவரும் பேசிக்கொண்டிருந்த போது இராமசாமிபுரம் குருசாமி மகன் பழனிச்சாமி என்பவரை சங்கரன்கோவில் அசெம்பிளி லாட்ஜ் முன்பு போலிசார் வைத்து போலிசார் கைது செய்தனர் என்றும், அவர்களிடம் மேற்படி பழனிச்சாமி எந்தவித அச்சுறுத்தலும் இல்லாமல் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் நானும் கனகராஜ் என்பவரும் சாட்சி கையொப்பம்

செய்தோம் என்றும், தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை:**